1982 மார்ச் 8]

திரு. கே. சௌந்திரராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அங்கே பல்வேறு பகுதிகளில் இன்று வரையிலும் எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவிப்பதோடு, இந்த 15 லட்சம் ரூபாய் என்பது யானைப்பசிக்குச் சோளப்பொறி போடுவது போன்றதாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். குத்பாநகர் குத்பா பள்ளம், வடலூர், பீமநகர், உறையூர், சோழராஜபுரம் மேல்சிந்தாமணி, கல்லுக்குழி, மல்லிகைபுரம், அண்டகொண்டார், ஆழ்வார்தோப்பு, வண்ணாரப்பேட்டை, எம்.ஜி.ஆர். நகர், காந்தி நகர் போன்ற பகுதிகள் அத்தனையும் சகதியிலே மிதந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனக்கேயுள்ள சிறந்த திறமையைப் பயன்படுத்தி, அந்தப் பகுதியிலே அவர் ஏற்கனவே இருந்தவர் என்பதையும் நினைவில் கொண்டு, அதை மாற்றி அமைக்க முயற்சி எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரும் நானும் சேர்ந்து எல்லா இடங்களையும் பார்த்திருக்கிறோம். அந்த அண்டகொண்டார் என்ற இடம் முன்பெல்லாம் மனிதர்கள் வசிப்பதற்கு ஏதுவில்லாமல் சுத்தமாக இருக்காது. ஆனால் இப்போது அதைப் பார்த்தால் மிக சிறப்பான இடமாக மாறி இருக்கின்றது. அதைப்போலவே மற்றப் பகுதிகளையும் மாற்றி அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பராமரிக்கும் பணி

*** வினா எண் 414—திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பராமரிப்பதற்கு அரசு செலவில் பராமரிப்பாளர்கள் போடப்பட்டுள்ளனரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம். மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளைப் பராமரிப்பதற்காக ஊராட்சி மன்றங்களும் பேரூராட்சி மன்றங்களும், தற்காலிகமாக ஆட்களை நியமித்துப் பராமரித்து வருகின்றன.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பல இடங்களில் உள்ள இந்த நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டு நீண்ட நாட்கள் ஆனதன் காரணமாக எங்கு பார்த்தாலும் ஒழுகிக் கொண்டு இருக்கின்றன. பல வருடங்களாக ஒழுகிக் கொண்டு இருக்கின்றன. அவைகளை

ரிப்பேர் செய்ய முடியாத நிலை இருக்கின்றது. ஆகவே அந்தத் தொட்டிகளை சீக்கிரத்திலே ரிப்பேர் செய்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல ஆண்டுகளாக ஒழுகிக் கொண்டிருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால் அதை இன்று தான் 8—3—1982 அன்றுதான் சொல்லவேண்டுமா ? தவறுகள் எங்கெங்கே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகின்றனவோ அவைகளை உடனடியாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் மிகவும் வேகமாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசைப் பற்றி ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். தட்டுங்கள் திறக்கப்படும் என்று இல்லாமல் தட்டாமலே திறக்கின்ற அளவுக்கு காரியங்களைச் செய்து வருகிறது. அதைப்போலவே இதுபற்றியும் கவனிக்கும்.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட்டு, என்னுடைய தொகுதியிலே அதைப் பழுதுபார்க்க ஆள் இல்லாமல்—ஊராட்சி மன்றங்கள் மூலமாக கட்டப்பட்ட பல மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் பழுதுபட்டிருக்கின்றன. அரசு அதற்குரிய நடவடிக்கை எடுத்து அந்தத் தொட்டிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, முதுகுளத்தூர் தொகுதி முக்கியமான தொகுதியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறையைத் தீர்ப்பதற்கு மறுபடியும் அதிகாரிகளோடு பேசி ஆவன செய்ய இந்த அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. பு. கோ. ஆனூர் ஜகதீசன் : தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் குடிநீர் திட்டத்தை ஏற்பதற்கு முன்னாலே ஊராட்சி ஒன்றியங்கள் பிரஷர் டாங்குகள் கட்டியிருக்கின்றன. அப்படி பிரஷர் டாங்கு மூலம் குடிநீர் வினியோகம் செய்து இருந்தாலும் கூட, பல்வேறு இடங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை புதிதாக தோற்றுவிக்கப்பட்டு இருக்கிறது. மேலும், அப்படிப்பட்ட பிரஷர் டாங்குகள், மேல்நிலைத் தொட்டிகள் மிகவும் பழுதான நிலையில் இருப்பதால், புதிதாக குடிநீர் தொட்டிகள் அங்கெல்லாம் கட்டித்தா அரசு முன்வருமா ? அதற்கான பராமரிப்புப் பணியாளர்களையும் காலதாமதம் இல்லாமல் உடனடியாக நியமிக்க இந்த அரசு முன்வருமா ? அப்படிப்பட்ட ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறதா ?

TRUTH ALONE TRIUMPHS

1982 மார்ச் 8]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அந்த ஊழியர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் என்பதைப் பற்றி அரசு பரிசிலனை செய்யவில்லை. அவர் கூறிய மற்றப் பிரச்னைகளைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது, எதையும் ஜெனரலைஸ் செய்யாமல், செங்கற்பட்டு தொகுதியில் இன்னின்ன இடத்தில் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னால், அதற்குத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முத்தையாபுரம், இராமச்சந்திராபுரம் கிராமங்களுக்கான குடிநீர் திட்டம்.

* வினா எண் 415—திரு. ஆர். கே. பெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்தையாபுரம், இராமச்சந்திராபுரம் கிராமத்திற்கு விளாத்தி குளம் ஆற்றில் இருந்து குடிதண்ணீர் கொண்டு வரும் நோக்கம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீடு ?

(இ) எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ), (ஆ) மற்றும் (இ) இராமச்சந்திராபுரம் உள்ளடங்கிய பனையடிப்பட்டி மற்றும் நான்கு சிற்றூர் களுக்கான கூட்டு குடிநீர் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 9.35 லட்சம் ஆகும். தற்போது திட்டத்தின் அனைத்துப் பணிகளும் முடிவடைந்து சோதனை ஓட்ட அடிப்படையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. புதூர் ஒன்றியத்தைச் சார்ந்த முத்தையாபுரம் சிற்றூர் பிரிவு 6 (நல்ல குடிநீர் நிலைகள் உள்ளது)-ல் வருவதால், இச்சிற்றூருக்கான குடிநீர் மேம்பாட்டுப் பணிகள், மாநிலத்திலுள்ள பிரிவு 6-ல் அடங்கியுள்ள அனைத்து சிற்றூர்களில் திட்டங்கள் மேற்கொள்ளப் படும்போது, பரிசீலிக்கப்படும்.

திருச்சி, மதுரை மாவட்டக் காடுகளில் கிடைக்கும் விலையுயர்ந்த பச்சைக் கற்கள்.

* வினா எண் 416—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், வெள்ளியணை, மதுரை மாவட்டம் வேடசந்தூர், பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள காடுகளில் விலையுயர்ந்த பச்சைக்கற்கள் கிடைப்பது அரசுக்குத் தெரியுமா ?